## தேங்காய் மற்றும் கொப்பரைக்கு நல்ல விலை கிடைக்கும்

தேசிய தோட்டக்கலை வாரியம் 2017-18 ஆம் ஆண்டின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, தேங்காய் 20.79 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 162.28 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக அறியப்படுகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இம்மாநிலங்கள் சேர்ந்து , நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில் 81 சதவீதம் பங்களிக்கின்றன .

உள்நாட்டு சந்தையில், வரும் பண்டிகை காலங்கள் மற்றும் கஜா புயலின் தாக்கங்களினாலும் தேங்காயின் தேவைகளை அதிகரிக்கச் செய்யும் எனக் கருதப்படுகிறது. கொப்பரை வரத்தானது உடுமலைபேட்டை, பல்லடம் ,தாராபுரம், கோபிசெட்டிபாளையம் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுருந்து பெருந்துறை சந்தைக்கு வருகிறது. மேலும், கர்நாடக தேங்காய் வரத்தானது பிப்ரவரி'19 மாதம் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் படி கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 18 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு விற்பனை மையத்திலும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் ஜனவரி- மார்ச், 2019 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.15 முதல் ரூ.17, வரை மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 105, ஆகவும் இருக்கும் எனஅறியப்படுகிறது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003*

*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள்துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003.*

*தொலைபேசி எண் -0422-6611284*